
பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 28 ஞாயிற்றுக்கிழமை 11.05.2025 கதிர் 183



## இது ரகசியம் அல்ல!

வடக்கில் ஒரு சபையையிலாவது அதுவும் யாழ்ப்பாணத்தில் ஒரு சபையிலாவது தாமும் ஆட்சியில் அமர்ந்துவிடவேண்டும் என்று அல்லாடுகின்றது தேசிய மக்கள் ☞ 2

# கூடுதல் ஆசனங்கள் பெற்ற கட்சி ஆட்சியமைக்க ஆதரவு தாருங்கள்

## தமிழ்க் கட்சிகளிடம் தமிழ் அரசு கோரிக்கை 35 சபைகளில் ஆட்சிக்கு உரிமைகோரவும் முடிவு

ஒரு சபையில் குறித்த ஒரு கட்சிக்கு கூடுதலான ஆசனங்கள் இருந்தால் அந்தக் கட்சிக்கு நிர்வாகத்தை அமைக்க கூடிய ஒரு உரிமை பொதுவாக இருக்கும். அந்த கோட்பாட்டிற்கு இணங்கி ஆதரவளிக்குமாறு தமிழ்க் கட்சிகளிடம் விநயமாக கோருகின்றோம் என்று தமிழ் அரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

உள்ளூராட்சித் தேர்தலில் 58 சபைகளில் தேர்தலில் போட்டியிட்டோம். ஆகக்குறைந்தது 35 சபைகளில் நாம் தனிப்பெரும் கட்சியாக உறுப்பினர்களைப் பெற்றுள்ளோம். ஆறு சபைகளில் அறுதிப் பெரும்பான்மையோடு வெற்றி பெற்றிருக்கிறோம். அந்தச் ☞ 2

## வெசாக் வாரம் ஆரம்பம்

2569 ஸ்ரீ புத்த வருடத்தின் அரச வெசாக் விழா, மூன்று நிகாயாக்களின் தேரர்கள் மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பங்கேற்புடன் இன்று (10) நுவரெலியா சர்வதேச பௌத்த நிலைய விகாரையில் ஆரம்பிக்கப்பட்டது.

'பஜெத மித்தே கல்யாண - பஜெத புரிசுத்தமெ'(நற்குணங்கள் கொண்ட உன்னத நண்பர்களுடன் பழகுவோம்) எனும் தொனிப்பெருளின் நடைபெறும் இம்முறை அரச வெசாக் விழா, மே மாதம் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நுவரெலியா மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடைபெறும்.

மகாநாயக்க தேரர்கள், அகில இலங்கை சாசனாரக்ஷக சபையின் அறிவுறுத்தல்களின்படி, ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,பௌத்த அலுவல்கள் திணைக்களம், மத்திய மாகாண சபை மற்றும் நுவரெலியா மாவட்ட செயலகம் ஆகியவை இணைந்து அரச வெசாக் விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

மேலும், மே 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை வெசாக் வாரமாகப் பிரகடனப்படுத்தி, அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்திற்கு ஏற்ப

# கொட்டாஞ்சேனை மாணவி விவகாரம் விரைவான விசாரணைக்கு உத்தரவு

## பிரதமர் பொலிஸாருக்கு வழங்கினார்

கொட்டாஞ்சேனையில் உயிரிழந்த 16 வயது மாணவி பாடசாலையிலும், தனியார் வகுப்பிலும் முகங்கொடுக்கநேர்ந்த சம்பவங்கள் தொடர்பில் பக்கச்சார்பின்றியும், சரியான முறையிலும், விரைவாகவும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் ஹரினி அமரசூரிய பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயின்றுவந்த 16 வயதுடைய டில்ஷி அம்ஷிகா எனும் மாணவி, அவர் வசிக்கும் தொடர்மாடிக்குடியிருப்பின் 7 ஆவது மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஏப்ரல் 29 கல்பொத்த வீதியில் பதிவானது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் மற்றும் உயிரிழந்த மாணவியின் பெற்றோருக்கும் பிரதமர் ஹரினி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது மாணவிக்கு பாடசாலையிலும், ☞ 2

## அரச ஊழியர்களுக்கு பேரிடர் கடன் வழங்க புதிய சுற்றறிக்கை

அரச ஊழியர்களுக்கு பேரிடர் கடன் வழங்குவது தொடர்பாக புதிய விதிமுறைகளை உள்ளடக்கிய புதிய சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அரச நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால், அமைச்சு செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களை ☞ 2

## மக்களின் சமிக்ஞையை புரிந்துகொண்டார்களாம்

உள்ளாட்சித் தேர்தலின் போது மக்கள் அளித்த சமிக்ஞையை ஆளும்தரப்புப் புரிந்துகொள்கிறது என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் விவகார அமைச்சர், வழக்கறிஞர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

அந்த சமிக்ஞையை ஆளும்தரப்பு புரிந்துகொண்டு தவறுகளைச் சரிசெய்து முன்னேறும் என்றும் அவர் கூறினார்.

"கடந்த உள்ளாட்சித் தேர்தலில் திசைகாட்டி வெற்றி பெற்றது, ஆனால் இன்று ☞ 2

## மாணவி தற்கொலையில் சம்பந்தப்பட்டோரை பாதுகாப்பதற்கே ஆளும்தரப்பு தீவிர முயற்சி

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. குற்றச்சாட்டு

கொட்டாஞ்சேனை தொடர்மாடியில் தற்கொலை செய்துகொண்ட பாடசாலை மாணவியின் இறப்பிற்குக் காரணமாக இருப்பவர்களை பாதுகாப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சிக்கின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் ஆளும்தரப்பின் ஆட்சிக்காலம் ஒருவருடத்துக்குள்ளேயே முடிவுறும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ☞ 2

## மாணவி தற்கொலை: மூவர் குழு நியமனம்

கொட்டாஞ்சேனை பகுதியில் தற்கொலை செய்துகொண்டதாகக்கூறப்படும் குழந்தையின் சம்பவம் குறித்த விசாரணையை நெறிப்படுத்த தேவையான தலையீடுகளைச் செய்வதற்காக, குழந்தை மருத்துவ நிபுணர் டாக்டர் அஸ்வினி பெர்னாண்டோ தலைமையிலான மூன்று பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். ☞ 2

## கொள்கை ரீதியான புரிந்துணர்வு ஏற்பட்டால் முழுமையான ஆதரவு

### உள்ளூராட்சி மன்ற விடயத்தில் காங்கிரஸ் அறிவிப்பு

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கே பேராதரவு வழங்கியுள்ள நிலையில் ஏனைய கட்சிகள் கொள்கை ரீதியான புரிந்துணர்வுக்கு வருகின்ற பட்சத்தில் நாம் முழுமையான ஆதரவளிப்பதற்குத் தயாராகவுள்ளோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கொக்குவில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியத்தில் பயணிக்கின்ற எம்முடைய தேச மக்களுக்கு மாபெரும் வெற்றியாக அதைக் கருதவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்

2009ஆம் ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ் மக்கள் படிப்படியாக தமிழ்த் தேசியத்தை விட்டு விலகுவார்கள் என்று சர்வதேச மட்டத்தில் சில கருத்துருவாக்கமும் சில வல்லரசுகள் மட்டத்தில் எதிர்பார்ப்பும் இருந்திருக்கலாம்.

குறிப்பாக இலங்கை ☞ 8

## இந்தியா – பாகிஸ்தான் மோதலை நிறுத்த இரு நாடுகளும் இணக்கம்

### அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு

இந்தியா மற்றும் பாகிஸ்தான் தாக்குதல்களை நிறுத்த ஒப்புக் கொண்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இருநாடுகளும் பரஸ்பரம் இராணுவ நிலைகள் மீது தாக்குதல்கள் மற்றும் எதிர் தாக்குதல்களை நடத்தி வந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி தமது மு கணக்கில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

'அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் இரவு நடந்த நீண்ட பேச்சுக்களுக்குப் பிறகு, இந்தியாவும் பாகிஸ்தானும் முழுமையான மற்றும் ☞ 2

## தமிழர் நிலத்தை தமிழரே ஆள்வதை முன்னிறுத்தி முடிவெடுக்கவேண்டும்

### அதுவே மக்களின் தீர்மானமும் என்கிறார் சுரேஸ்

தமிழர்நிலத்தைதமிழரேஆட்சிசெய்யவேண்டும் என்பதன் அடிப்படையில் தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் அரசியல் கட்சிகள் கூட்டிணைந்து உள்ளூராட்சிசபைகளைநிர்வகிக்கவேண்டும் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சக்தி. கொழும்பில் ரில்வின் சில்வா என்னதான் வீரவசனங்கள் பேசினாலும் யாழ்ப்பாணத்தில் கட்சியின் உள்ளாட்சி சபை உறுப்பினர்களும் அமைப்பாளர்களும் எதிர்க் கட்சிகளான, அதாவது ஈபிடிபி, சுயேச்சைகள், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்று எந்தக் கட்சியின் காலிலாவது விழுந்தென்றாலும் ஆட்சியைப் பிடிக்க தலைகீழாக நிற்கிறார்கள். அப்படிப் பிடித்துவிட்டால் தமிழ் மக்கள் மத்தியில் தமக்கு அங்கீகாரம் கிடைத்துவிட்டது என்று காட்டிவிடலாம், அதன் மூலம் கால் பதித்துவிடலாம் என்று கருதுகின்றார்கள்.

தொங்கு சபைகள் அமைந்திருக்கக்கூடிய இடங்களில் குறிப்பாக தீவகத்தின் சபைகளில் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களில் சிலருக்கு மண்டையைக் கழுவி அல்லது தேவையானவற்றைக் கொடுத்தேனும் தம்வசப்படுத்தி விடலாம் என்ற முயற்சிகள் இரவிரவாக நடக்கின்றன. உறுப்பினர்களின் வீடு தேடிப்போய் பேரம் பேசுகிறார்கள். இத்தனைக்கும் தேர்தலுக்கு முன்னர் தங்களைத் தவிர அனைத்துக் கட்சிகளும் திருட்டுக் கட்சிகள், ஊழல் மோசடிக் கட்சிகள் என்றும் அந்தக் கட்சிகளிடம் ஆட்சி அதிகாரம் போனால் அவற்றின் திட்ட முன்மொழிவுகளுக்கு நிதி ஒதுக்க ஒன்றுக்குப் 10 தடவைகள் யோசிப்போம் என்றும் வாய் கிழயப்பேசியவர்கள்தான் இப்போது அத்தகைய எந்தக் கட்சியின் ஆதரவுடன் என்றாலும் ஒரேயொரு சபையையாவது பிடித்துவிட மாட்டோமா என்று பிச்சையெடுக்கிறார்கள்.

இது பற்றி தமிழ் அரசுக் கட்சி பெரிதாக அலட்டிக்கொள்வதாக இல்லை. தேசிய மக்கள் சக்தி அப்படி ஆட்சி அமைப்பதற்கு யாராவது தமிழ்க்கட்சிகள் அல்லது சுயேச்சைகள் உதவி செய்தால், தமிழ்த் தேசியம் குறித்த அவர்களின் நிலைப்பாடு அம்பலப்பட்டுப்போகும், அதற்குரிய பதிலை மக்கள் அடுத்தடுத்த தேர்தல்களில் வழங்குவார்கள் என்பதால் என்பிபியின் இந்த தரம் குறைந்த முயற்சிகள் குறித்து தாங்கள் அலட்டிக்கொள்ளப் போவதில்லை என்று தமிழ் அரசுக் கட்சியின் முக்கிய நபர் ஒருவர் தெரிவித்தார்.

தமது கட்சி எந்தவொரு சபையிலும் ஆட்சியதிகாரத்தைப் பிடிக்கப் பேரம் பேசாது என்றும், தங்களுக்கு அதிக ஆசனங்கள் உள்ள 35 சபைகளிலும் தமது தவிசாளர்கள், முதல்வர்களை, நகர பிதாக்களை முன்மொழிவோம் என்றும் தமிழ்த் தேசியம் பேசுவோர் மற்றும் என்பிபி ஆட்சிக்கு வரக்கூடாது என்று கருதுவோர் தமக்கு ஆதரவளிக்கவேண்டும் என்றும் அவர் கூறுகின்றார். தமிழ் அரசுக் கட்சி இந்த அணுகுமுறையையே கடைப்பிடிக்கும். மற்றைய கட்சிகள் இதற்கு மாறாக தமிழ் அரசைவீழ்த்தி ஆட்சியைப்பிடிக்க குறுக்குவழி அரசியல் செய்ய முற்பட்டால் அப்போது தமிழ் அரசு பதில் நடவடிக்கை குறித்த ஆராயும் என்பதே கட்சியின் நிலைப்பாடு என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த முடிவுதான் நேற்று வவுனியாவில் கூடிய கட்சியின் அரசியல் குழுவிலும் எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். தமிழ் அரசுக் கட்சியின் முடிவு இதையொட்டியதாகத்தான் இருக்கும் என்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். அதேபோன்று யாழ். மாநகர சபை உள்ளிட்ட தமது கட்சி அதிக ஆசனங்களைப் பெற்ற சபைகள் எல்லாவற்றிலும் தமிழ் அரசு தவிசாளர், முதல்வர், நகர பிதாக்களை முன்நிறுத்துவது என்பதே நேற்றைய கூட்டத்தின் முடிவாக இருந்தது. அதே நேரம் கிழக்கில் சில சபைகளில் ஆட்சியமைக்க முஸ்லிம் கட்சிகளின் ஆதரவையும் பெறவேண்டி இருக்கும் என்பதால், தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவை எதிர்பார்க்கின்றோம் என்றில்லாமல் தமிழ்க் கட்சிகளின் ஆதரவை எதிர்பார்க்கின்றோம் என்றே விழிப்பது என்கிற முடிவையும் அரசியல் குழு எடுத்துள்ளது.

நேற்றைய அரசியல் குழுக் கூட்டம் மிகச் சுமுகமாக நடந்தது. வழக்கமாக சுமந்திரனின் நிலைப்பாடுகளுக்கு மறுத்தான் போடும் சிறீதரன் நேற்று மிக அமைதியாக ஒத்துழைப்பாக நடந்துகொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. சுமந்திரனின் வழிகாட்டலால் கட்சியின் அரசியல் குழு எடுத்திருக்கக்கூடிய முடிவின் மூலம் பச்சிலைப்பள்ளியில் காங்கிரஸின் ஆதரவோடு ஆட்சியை இலகுவாக்கப் பிடிக்க முடியும் என்று அவர் கணக்குப் போடுகிறார் போலும். ஆனால் கொள்கை, கோட்பாட்டு இணக்கம் என்று மீண்டும் கொடி பிடிக்கத் தொடங்கியிருக்கும் கஜேந்திரகுமார் எப்போது சிறீதரனைக் கவிழ்ப்பார் என்று தெரியாது என்பதால் எதுவேண்டுமானாலும் நடக்கலாம்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தமிழ்க்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைகளில் தவிசாளர், உபதவிசாளரை தெரிவு செய்யும் பொறுப்பு கட்சிக்கு மட்டுமே இருக்கும். கட்சி சார்ந்து பொதுச் செயலாளர் அந்தப் பெயர்களை அனுப்பி வைப்பார். எமக்காக வாக்களித்த மக்களின் நம்பிக்கை வீண் போகாது. நாம் பொறுப்பெடுக்கும் சபைகளை திறமையுடனும் நேர்மையுடனும் நிர்வகிப்போம்.

ஒரு சபையில் குறித்த ஒரு கட்சிக்குக் கூடுதலான ஆசனங்கள் இருந்தால் அந்தக் கட்சிக்கு நிர்வாகத்தை அமைக்கக்கூடிய ஒரு உரிமை பொதுவாக இருக்கும். அந்த வகையில் இந்த 35 சபைகளுக்குமான தவிசாளர், உபதவிசாளர்களை நாங்கள் முன்னிறுத்துவோம்.

மற்றைய கட்சிகள் இந்த பொதுவான கோட்பாட்டிற்கு இணங்கி நாம் முன்னிறுத்துகின்ற வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும் என்று தன்மையாகக் கேட்டுக்கொள்கிறோம். சில சபைகளில் விதிவிலக்கு ஏதும் இருந்தால் அது தொடர்பில் ஆராய்வோம்.

பொதுவான வகையில் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டிற்கு வந்துள்ளோம். யாழ். மாநகரசபைக்கும் இது பொருந்தும்.

விசேடமாக நாங்கள் கேட்டுக்கொள்வது தமிழ் கட்சிகளையே. அந்தக் கட்சிகள் இந்த உடன்பாட்டிற்கு வருவது நல்லது என்பது எமது வினயமான வேண்டுகோள். முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பேசும் கட்சிகளோடும் நாம் இணங்கியே செயற்படுவோம்.

ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியை இந்தத் தேர்தலில் நாம் விமர்சித்ததாக எனக்கு நினைவில்லை. அவர்களும் எங்களை விமர்சித்ததாக ஞாபகமில்லை. சில கட்சிகள் எங்கள் மீது பாரதூரமான விமர்சனங்களை முன்வைக்கும்போது அதற்கான பதில்களையே வழங்கியிருந்தோம்.

தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான கூட்டு தொடர்வது நல்லது என்பது எமது சிந்தனை. காலப்போக்கில் அதனைத் தீர்மானிப்போம். எனவே இந்த முயற்சி அப்படியான ஒரு போக்கிற்கும் வழிவகுக்கலாம்.

வவுனியாவில் எமது கட்சி பின்னடைந்துள்ளது என்று கூறுவது ஒரு மாயை. கடந்த தேர்தலில் எமது கட்சிக்கு கிடைத்த வாக்குகளைவிட இந்த தேர்தலில் வவுனியாவில் கூடுதலான வாக்குகள் கிடைத்துள்ளன. அது பின்னடைவு அல்ல. திடீர் என்று வானைத்தொட முடியாது. நாங்கள் சீலிங்கை தொட்டுவிட்டோம் இனி மேலே போவோம் - என்றார்.

100

## கொட்டாஞ்சேனை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் வகுப்பிலும் முகங்கொடுக்க நேர்ந்த சம்பவங்கள் தொடர்பில் பக்கச்சார்பின்றியும், சரியான முறையிலும், விரைவாகவும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு பிரதமர் ஹரினி அமரசூரிய அறிவுறுத்தினார்.

அதேவேளை அம்மாணவி பாடசாலையில் முகங்கொடுக்க நேர்ந்த பாலியல் துன்புறுத்தல் குறித்து முறைப்பாடு அளிக்கப்பட்ட வேளையில், அது குறித்து செயற்திறன்மிக்க வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பது பற்றி கல்வி அமைச்சினால் உள்ளக விசாரணையொன்று முன்னெடுக்கப்பட்டுவருவதாக பெற்றோர் மற்றும் பொலிஸாருக்கு பிரதமர் தெரியப்படுத்தினார்.

அதேபோன்று சிறுவர் துஸ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் தலையீடு செய்யவேண்டிய அரச கட்டமைப்புக்கள் மிகவும் வலுவிழந்த நிலையில் இருப்பதுடன், துஸ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுவர்கள் சார்ந்து அக்கட்டமைப்புக்களால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாததன் காரணமாக, அக்கட்டமைப்புக்களைக் கண்காணித்து, அவற்றை உரியவாறு மறுசீரமைப்பதற்கு பிரதமரால் விசேட வைத்திய நிபுணர் அஷ்வினி பெர்னாண்டோ தலைமையில் மூவரடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜயபால ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

## தற்கொலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொட்டாஞ்சேனை தொடர்மாடியில் தற்கொலை செய்துகொண்ட பாடசாலை மாணவி விவகாரத்தில் சந்தேகநபர்களைப் பாதுகாப்பதற்கு ஆளும்தரப்பு தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

சில சந்தேகநபர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, சிலர் குற்றப்புலனாய்வு பிரிவில் சென்று முறைப்பாடளிக்கின்றனர். சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் இது குறித்து தனக்கு முறைப்பாடு கிடைக்கவில்லை என்று கூறுகின்றார்.

உயிரிழந்த மாணவிக்காகவும், அவரது குடும்பத்துக்காகவும் முன்னிலையாகவேண்டிய அமைச்சர் ஆளும்தரப்பைப் பாதுகாப்பதற்காக மாத்திரம் முன்னிலையாகியுள்ளார்.

இதே நிலைமை தொடர்ந்தால் இந்த ஆளும்தரப்பால் தொடர்ச்சியாகப் பயணிக்க முடியாது. அதன் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக அல்லது ஒரு வருடமா என்பதை தீர்மானிக்க வேண்டிய நிலைமையிலேயே உள்ளது என்றார்

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக தாக்குதல்களை நிறுத்துவதற்கு ஒப்புக்கொண்டதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பொது அறிவு மற்றும் சிறந்த நுண்ணறிவைப் பயன்படுத்தியதற்காக இரு நாடுகளுக்கும் வாழ்த்துக்கள்' என்று அவர் பதிவில் கூறியுள்ளார்.

இதற்கமைய பாகிஸ்தானும் இந்தியாவும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தாக்குதல்களை நிறுத்த ஒப்புக் கொண்டதாக பாகிஸ்தான் துணைப் பிரதமர் இஷாக் டார் தனது யீ கணக்கில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஜம்மு-காஷ்மீர் - பஹல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் சுற்றுலாப் பயணிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 26 பேர் கொல்லப்பட்டதுடன் 17 பேர் காயமடைந்ததைத் தொடர்ந்து பாகிஸ்தானும் இந்தியாவும் மோதலைத் தொடங்கியிருந்தன.

## தமிழர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற ஆணையை வழங்கியுள்ளனர். ஆகவே அதனை மையப்படுத்தி கட்சிகள் தங்களது தீர்மானங்களை எடுக்கவேண்டும் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப்பேச்சாளரும், ஈபிஆர்எல்எவ் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

மக்கள் வழங்கிய தீர்ப்பின்படி ஆட்சி அதிகாரத்தை தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக ஓரணியில் இணைந்து செயற்படுத்துவது அவசியம். இதேநேரம் தமிழ் அரசுக் கட்சி அதிக ஆசனங்களை எடுத்துக் கொண்டாலும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை அவர்களுக்கு இருக்கவில்லை.

இதனால் தமிழ் மக்களின் நலன்கருதி ஏனைய தரப்பினருக்கும் விட்டுக்கொடுப்புகளுடன் செயற்பட தமிழ் தரப்புகள் தயாராக வேண்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. இதேநேரம் தற்போது பெரிய, சிறிய என்ற நிலையில் எந்தவொரு கட்சியும் இல்லை. அனைத்தும் சமமான நிலைப்பாட்டிலேயே இருக்கின்றன.

தவறுகள் இனிமேல் இழைக்கப்படக்கூடாது. ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சி, போன்ற கட்சிகள் தேசியத்தை வைத்தே தேர்தலை எதிர்கொண்டன. இந்த கட்சிகள் அதிகபடியான ஆசனங்களை பெற்று இருக்கின்றன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 307 ஆசனங்களையும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி 106 ஆசனங்களையும், தமிழ் காங்கிரஸ் 79 ஆசனங்களையும் பெற்றுள்ளது. எனவே ஏறத்தாழ 500 ஆசனங்களை கூட்டாகப் பெற்றுள்ளனர்.

மக்களிடம் வைத்த கோரிக்கையை மக்கள் ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு கட்சிக்கும் அதிகப்படியான ஆசனங்களை வழங்கியிருக்கின்றனர். மக்கள் கொடுத்த ஆணைக்கு ஏற்ப இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஆகிய கட்சியினர் கூட்டாகப் பேசி ஆட்சி அதிகாரங்களை தமிழ் மக்கள் நிர்வாகத் திறனைகளை ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்.

மாகாண சபையினை நடத்த முடியாதவர்கள், நிதியினைத் திருப்பி அனுப்பியவர்கள், நிர்வாகத்தினை செயற்படுத்த முடியாதவர்கள் என பல்வேறுபட்ட எதிர்ப் பரப்புரைகள் பல்வேறு தமிழ் தரப்பினர்களிடம் இருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைக்க முடியாத சூழ் நிலையில்தான் உள்ளனர்.

எனவே தமிழ் மக்களின் அதிகாரம், எதிர்காலம், உரிமைகள் என்பவற்றை புறம்தள்ளி நடக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. மக்கள் ஆசனங்களை அனைவருக்கும் பகிர்ந்தளித்துள்ளனர். பேச்சு சரியாக நடைபெறுமாக இருந்தால் ஓரணியில் நின்று ஆட்சி அதிகாரங்களில் பகிர்ந்துகொள்வதில் சிக்கல் இருக்காது சிறப்பாக அமையும் என்றார்.

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுறுத்தும் வகையில் வெளியிடப்பட்ட இந்த சுற்றறிக்கை 2025.05.01 முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதில், 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மூலம் அரச ஊழியர்களின் குறைந்தபட்ச ஆரம்ப சம்பளம் உயர்த்தப்பட்டதை கருத்தில் கொண்டு, அரச ஊழியர்களுக்கு பேரிடர் கடன் வழங்குவதற்கான உச்சவரம்பு எல்லையை தற்போதுள்ள 250,000 ரூபாவில் இருந்து 400,000 ரூபாவாக உயர்த்த ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## மாணவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் நேற்றுத் தனது அலுவலகத்தில் சம்பவம் குறித்து விசாரணை நடத்தும் பொலிஸ் குழுவுடனும், குழந்தையின் பெற்றோருடனும் சிறப்பு கலந்துரையாடல் நடத்தினார்.

பள்ளி மற்றும் பயிற்சி வகுப்பில் நடந்த சம்பவங்கள் குறித்து பாரபட்சமற்ற, துல்லியமான மற்றும் விரைவான விசாரணையை நடத்துமாறு காவல்துறை விசாரணைக்குழுவிற்கு அவர் அறிவுறுத்தினார்.

இந்தச் சம்பவம் அறிவிக்கப்பட்ட நேரத்தில் எடுக்கப்பட்ட செயல்முறை திறமையாக மேற்கொள்ளப்பட்டதா என்பது குறித்து கல்வி அமைச்சகம் உள் விசாரணையை நடத்தி வருவதாக பிரதமர் குழுவிடம் தெரிவித்தார்.

குழந்தை துஸ்பிரயோகம் தொடர்பான வழக்குகளில் தலையிட வேண்டிய அரசு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மிகவும் மோசமாக இருப்பதாகவும், துஷ்பிரயோகம் செய்யப்பட்ட குழந்தைக்கு நேர்மறையான முறையில் பதிலளிக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்வில் சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் செல்வி சரோஜா பால்ராஜ், பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேயபால ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சி வெற்றியைக் கொண்டாடுகிறது. நாங்கள் காத்திருக்கிறோம், அவர்களை வேடிக்கை பார்க்க விடுகிறோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# டெங்கு, சிக்குன்குனியா நோய்களை கட்டுப்படுத்த சிறப்புத் திட்டம் அமுல்

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் அழைப்பின் பேரில், டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் குறித்து ஆராய, சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தலைமையில், சுகாதார அமைச்சில் சிறப்புக் கலந்துரையாடலொன்று அண்மையில் நடைபெற்றது.

தொற்றுநோயியல் பிரிவு மற்றும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், டெங்கு மற்றும் சிக்குன்குனியாவைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் விரிவாக கலந்துரையாடப்பட்டன

குறிப்பாக, இந்தக் கலந்துரையாடலின் போது, இரத்தினபுரி மருத்துவமனை தொடர்பாக சமீபத்திய நாள்களில் அறிவிக்கப்பட்ட நிலைமை மற்றும் ஆபத்து நிறைந்த மாவட்டங்களின் தற்போதைய நிலைமை ஆகியவை மிக ஆழமாக ஆராயப்பட்டன

இங்கு, டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு குறுகிய கால மற்றும் நீண்ட காலத் திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான அடிப்படை நடைமுறைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது, மேலும் பல முடிவுகளும் இங்கு எடுக்கப்பட்டன, குறிப்பாக சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து பொதுமக்களுக்குக் தெளிவு படுத்துவதற்கு திட்டங்களை மிக விரைவாக செயல்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சுதத் சமரவீர, தலைமை தொற்றுநோயியல் நிபுணர் ஹசித திசேரா மற்றும் அந்தத் துறைகளில் பணிபுரியும் விசேட வைத்தியர்கள், மருத்துவர்கள் மற்றும் பிற அதிகாரிகள் குழு இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இந்தக்கலந்துரையாடலைத் தொடர்ந்து, சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு ஒரு சிறப்பு அறிக்கையை வெளியிட்டது, இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் கடந்த 17 வாரங்களில் நாட்டில் 18,749 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும், இடைவிடாது பெய்யும் மழை காரணமாக வரும் நாட்களில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் இருப்பதாகவும் கூறியது.

குறிப்பாக (கொழும்பு நகர சபைப் பிரிவுக்குள்) கம்பஹா, களுத்துறை, மாத்தறை, காலி, மாத்தளை, மட்டக்களப்பு, இரத்தினபுரி, திருகோணமலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்கள் அதிக ஆபத்துள்ள மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதால், இந்த மாதம் (மே) சிறப்பு நுளம்பு கட்டுப்பாட்டு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக, நாட்டின் பல்வேறு இடங்களில் சிக்குன்குனியா நோயாளிகளின் போக்கு காணப்படுவதாகவும், டெங்குவின் பரப்பிகளான ஏடிஸ் ஈஜிப்டி மற்றும் ஏடிஸ் அல்போஜிகஸ் போன்ற அதே கொசு இனங்களால் சிக்குன்குனியாவும் பரவுகிறது என்றும் இந்த அறிவிப்பு மேலும் அறிவுறுத்துகிறது. எனவே, வீடுகளையும் வளாகங்களையும் சுத்தமாக வைத்திருப்பது டெங்கு மற்றும் சிக்குன்குனியா இரண்டையும் கட்டுப்படுத்த உதவும்.

எந்தவொரு சூழலிலும் இந்த கொசுக்கள் பெருகும் அபாயம் இருப்பதால், வீடுகள் உட்பட அனைத்து பகுதிகளையும் வாரத்திற்கு குறைந்தது 30 நிமிடங்கள் சுத்தமாக வைத்திருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், காலையிலும் மாலையிலும் கொசு கடிப்பதைத் தவிர்க்க உடலை மூடும் ஆடைகளை அணிய வேண்டும் என்றும் அங்கீகரிக்கப்பட்ட கொசு விரட்டிகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவருக்கு அதிக காய்ச்சல், தலைவலி, தசை மற்றும் மூட்டு வலி, குமட்டல் மற்றும் வாந்தி, தோலில் சிவப்பு புள்ளிகள் மற்றும் இரத்தப்போக்கு ஏற்பட்டால், அவர்கள் உடனடியாக மருத்துவ உதவியையோ அல்லது தகுதிவாய்ந்த மருத்துவரையோ அணுக வேண்டும் என்றும், காய்ச்சலைக் கட்டுப்படுத்த பாராசிட்டமால் மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கை மேலும் அறிவுறுத்துகிறது.

### கொட்டாஞ்சேனை மாணவி உயிர்மாய்ப்பு;

## கடந்தகால விசாரணைகள் குறித்து பொலிஸ் தலைமையகம் விளக்கம்

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்ற 16 வயதுடைய மாணவி ஒருவர் கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி கொட்டாஞ்சேனை, கல்பொத்த வீதியில் உள்ள தொடர்மாடி குடியிருப்பின் மேல் மாடியிலிருந்து கீழே குதித்து உயிரை மாய்த்துக்கொண்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் பல்வேறு பிரதேசங்களில் பொதுமக்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதையடுத்து குற்றம்சாட்டப்பட்ட கொழும்பு பம்பலப்பிட்டி பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலையின் ஆசிரியர் உடனடியாக பணி இடமாற்றம் செய்யப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவருவதாவது -

உயிரிழந்த மாணவி கடந்த ஆண்டு கொழும்பு பம்பலப்பிட்டி பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் போது அதே பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 08 ஆம் திகதி பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று கிடைத்தது.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான ஆசிரியர் கடந்த ஜனவரி மாதம் 08 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட ஆசிரியர் கொழும்பு புதுக்கடை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேக நபரான ஆசிரியருக்கு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் மே 19 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்த மாணவி மன விரக்தியில் உயிரை மாய்த்துக்கொண்டுள்ள நிலையில், தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவர் இந்த மாணவியை சக மாணவர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியுள்ளதாக பொலிஸ் பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பணியகத்திற்கு கடந்த 06 ஆம் திகதி முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முள்ளம்பன்றி மற்றும் மான் இறைச்சிகளுடன் மூவர் கைது

அநுராதபுரம், நொச்சியாகம பிரதேசத்தில் முள்ளம்பன்றி மற்றும் மான் இறைச்சிகளுடன் மூன்று சந்தேக நபர்கள் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 02 கிலோ கிராம் மான் இறைச்சியும் 05 கிலோ 500 கிராம் முள்ளம்பன்றி இறைச்சியும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் நொச்சியாகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் சந்தேக நபர்களுக்கு எதிராக 90 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## பதவியை இராஜினாமா செய்தார் அரசமைப்பு பேரவையின் செயலர்



அரசமைப்பு பேரவையின் செயலாளராக கடமையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தம்மிக்க தசநாயக்க தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தனிப்பட்ட விடயங்கள் காரணமாக இந்த இராஜினாமா இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்மிக்க தசநாயக்க கடந்த 2023 ஆம் ஆண்டு மே 25 ஆம் திகதி நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள நிலையில் அதே ஆண்டில் அரசமைப்பு பேரவையின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஈழ சைவத்தின் ஒளிச்சுடர்

**ஒவ்வொருவரின் வாழ்வில் முதன்மையான ஓர் உறவாக திகழ்பவர் 'அம்மா'. பசியிலும், பாரத்திலும், புனிதத்துன்பத்திலும்கூட குழந்தையின் நலனையே முதன்மைப்படுத்தும் அன்னையின் பாசம் என்பது உலகின்எந்தத்துலங்கும்சொற்களாலும்முழுமையாக விவரிக்க முடியாத அளவிற்கு ஆழமானது. இந்த அழிவில்லா பாசத்தின் நனவாக ஒவ்வொரு ஆண்டு மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.**

**இந்த நாளின் நோக்கம் பாசத்தின் பூரண வடிவமானஅன்னையைநினைவுகூர்வதுமட்டுமல்ல; அவர்களின் ஈடுசெய்ய முடியாத சேவைகளுக்கு நன்றி தெரிவிப்பதும், சமூகத்தில் அன்னையின் பங்களிப்பை ஒளிரச் செய்வதும் ஆகும். வீட்டுப் பொறுப்புகளுக்குள் நெடுந்தூரம் தன்னைத்தானே மறந்து வாழும் பெண்கள், அன்னையாகிய பின்பு அதைவிடக் கூடிய அளவுக்கு பல துறைகளில் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கிறார்கள். இது ஆண்கள் மேம்பட்ட உலகில் பெரிதும் கவனிக்கப்படாததொன்றாகவே இருந்து வருகிறது.**

**இன்றைய நகரமயமான, வேகமான உலகத்தில், குழந்தைகள் மட்டுமல்ல, பெற்றோர்களும் ஒரு வேளை ஒருவருக்கொருவர் நேரம் தர முடியாத நிலைமைகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இந்நிலையில் அன்னையின் இடத்தைப் புரிந்துகொள்வது, அவரது வேலையின் மதிப்பை உணர்வது, மற்றும் அவருக்கான அன்பையும் மதிப்பையும் நேரடியாகத் தெரிவித்துக்கொள்வது அவசியமான ஒன்றாக மாறியுள்ளது. இந்த நாளை சின்னங்களாகவும், வாடிக்கையாகவும் கொண்டாடி விடாமல், உணர்வோடு அனுசரிக்க வேண்டியது இன்றைய தலைமுறையின் பொறுப்பு.**

**மாறிவரும்சமூககட்டமைப்புகளிலும், தொழில்நுட்ப வளர்ச்சியிலும், அன்னை என்ற குரல் மட்டும் மட்டும் மட்டும் அழிவில்லாத ஒன்று. அவர்களின் செயல் எளிமையானதாக இருந்தாலும் அதன் தாக்கம் பரந்தது. ஒரு குழந்தையின் மனநிலையை வடிவமைக்கும் முதல் ஆசிரியராகவும், ஒழுக்கத்தின் முதற் பீடமாகவும் அம்மா விளங்குவார்.**

**எனவே, இந்த அன்னையர் தினத்தில் ஒரு மலர் கொடுப்பதற்கும் மேல், அவர்களுடன் நேரம் கழிப்பதையும், அவர்களது சிந்தனைகளுக்குச் செவிகொடுப்பதையும், அவர்களது உழைப்பிற்கு நன்றி கூறுவதையும், நாம் கடமையாக ஏற்க வேண்டும்.**

**அன்னையின் அன்பு என்பது தாய்ப்பாலில் கரைந்த பாசம்.**

**அது வாழ்வின் முதற்காற்றும், கடைசியான நிழலுமாகும்.**

**அம்மாவின் புனிதத்தையே, இந்த நாளில் நாம் வாழ்வாக எண்ணுவோம்.**

# சமுதாய மட்ட புனர்வாழ்வு தொடர்பான பயிற்சிநெறி

சமூக சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் தேசிய இளைஞர் படைப்பிரிவில் உள்ள மாணவர்களுக்கு சமூக மட்ட புனர்வாழ்வு தொடர்பான பயிற்சியானது வெள்ளிக்கிழமை தேசிய இளைஞர் படையணி நிறுவனத்தில் நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகளை எவ்வாறு அடையாளம் காண்பது, மாற்றுத்திறனாளிகளுக்கு எவ்வாறு அணுகுமுறை வசதிகளை வழங்குவது, மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்களை வழங்குகின்ற செயல்முறைகள், மாற்றுத்திறனாளிகளை எதிர்காலத்தில் பயிற்சித்திட்டங்களுக்குஉள்வாங்குதல்மற்றும் மாற்றுத்திறனாளிகளை தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பும் முறைகள் தொடர்பாக பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதன்போது வளவளராக சமூக சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் தவராசா பிரணவன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# காயங்களுடன் சிறுமி சாவு ; பொலிஸ் தீவிர விசாரணை

பதுளை - பசறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடகம பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

பசறை - உடகம பிரதேசத்தைச் சேர்ந்த 7 வயதுடைய சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தசிறுமிஅன்றையதினம்இரவுதிடீரென சுகவீனமுற்று பசறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், சிறுமியின் மரணம் குறித்து சந்தேகிப்பதாக வைத்தியர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்தசிறுமிகடந்தசிலநாள்களாககாய்ச்சல் மற்றும் சளி காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

எவ்வாறிருப்பினும், உயிரிழந்த சிறுமியின் உடலில் பல காயங்கள் காணப்படுகின்றன என வைத்தியர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

சிறுமியின்சடலம்பிரேதபரிசோதனைக்காக பசறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிறுமியின் தாய் பல வருடங்களுக்கு முன்னர் கணவரையும் பிள்ளைகளையும் விட்டு சென்றுள்ளார் எனவும் சிறுமியின் தந்தை இரண்டாவது மனைவியுடன் வாழ்ந்து வருவகிறார் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பசறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# வானவேடிக்கையால் தீப்பற்றி எரிந்த யாழ் பண்பாட்டு மலர்ச்சிக் கூடம்!

யாழ்ப்பாணம் - கந்தர்மடம் பழம்வீதியில் அமைந்துள்ள சமூக செயற்பாட்டு மையமாக விளங்கி வந்த பண்பாட்டு மலர்ச்சிக் கூட அரங்காலயத்தின் மேற்கூரை தீ விபத்துக்குள்ளாகி உள்ளது.

இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

பழம் வீதியில் உள்ள வைரவர் ஆலயத்தின் அலங்காரத்திருவிழா இடம்பெற்று வருகிறது. அன்றிரவு சுவாமி வெளிவீதியுலாவின் போது வானவேடிக்கைகள் இடம்பெற்ற வேளையில் அதிலிருந்து பறந்த தீப்பொறி அரங்காலய மேற்கூரையில் பட்டு எரிந்துள்ளது.

இதனைப் பார்த்த அயலவர்கள் உடனடியாக தீயணைப்பு பிரிவினருக்கும், பொலிஸாருக்கும், அரங்காலய நிர்வாகத்தினருக்கும் அறிவித்துள்ளனர்.

அவர்கள் உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்த போதும் கிடுகு ஓலைகள் முழுவதும் எரிந்ததுடன், மேற்கூரை மரங்கள், இலத்திரனியல் பொருள்கள், கதிரைகள் உள்ளிட்ட தளபாடங்களும் பகுதியளவில் தீயினால் சேதமடைந்தன.

இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைக்காக பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தினரிடம் இருந்து வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

ஆலயங்கள் மற்றும் பொது நிகழ்வுகளில் வான வேடிக்கைகள் நிகழ்த்துபவர்கள் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பண்பாட்டு மலச்சிக் கூடத்தில் பல்வேறு சமூக செயற்பாட்டு நிகழ்வுகளும், அரங்க செயற்பாடுகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் கல்கிஸ்ஸை போதைப்பொருளுடன் கைது!

பல்வேறுதிருட்டுசம்பவங்களுடன்தொடர்புடைய சந்தேக நபரொருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் கொழும்பு கல்கிஸ்ஸை - ராஹுஅல வீதி பகுதியில் வைத்து சந்தேக நபர் 12 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மொரட்டுவை பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின்விசாரணையில்,கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மொரட்டுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இரண்டு வீடுகளின் கதவுகளை உடைத்து பெறுமதியான பொருள்களை திருடியுள்ளதாகவும், வாகனத்தில் இருந்த மடிக்கணினி மற்றும் டெப் கணினி ஆகியவற்றை திருடியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.



சந்தேக நபரிடமிருந்து மடிக்கணினி, 2 டெப் கணினிகள் , தங்க மாலை, தங்க தோடுகள் மற்றும் 2 எரிவாயு அடுப்புகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸ்ஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மதுபோதையில் காரை செலுத்தியதால் விபத்து

## சாரதி இறப்பு



குளியாப்பிட்டிய - மாதம்பே வீதியில் பலுகமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 25 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டு அருகிலிருந்த வீடொன்றின் இரும்புநுழைவாயில் மற்றும் மின்கம்பத்தின் மீது மோதி பின்னர் மற்றுமொரு வீட்டின் கிணற்றின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த காரின் சாரதி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது காரின் சாரதி மதுபோதையில் இருந்துள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் ரெலோவின் உயர்மட்டக் கலந்தாய்வு

தமிழீழவிடுதலைஇயக்கத்தின் தலைமைக் குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம் பெற்று வருகின்றது.

ரெலோ தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில்வவுனியாவைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் குறித்த கூட்டம் நடைபெற்றது.

ரெலோவின்,சமகால அரசியல் நிலைவரங்கள், உள்ளூராட்சி தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில் சபைகளில் ஆட்சிய மைப்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இக் கலந்துரையாடலில் பேசப்பட்டதாக அறிய முடிகின்றது.

கலந்துரையாடலில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், கோவிந்தன்கருணாகரன், கட்சியின் முக்கியஸ்தர்களான ஹென்றிமகேந்திரன், பிரசன்னா இந்திரகுமார், சுரேன்குருசாமி, உள்ளிட்ட உயர்மட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 100



காலைக்கதிர் Kalaikkathir

# செட்டிபாளையம் பிரதான வீதியில் விபத்தில் இரு சிறுவர்கள் காயம்

மட்டக்களப்பு மாவட்டம் கலுவாஞ்சொடி பொலிஸ் பிரிப்புக்குட்பட்ட செட்டிபாளையம் பிரதான வீதியில் சனிக்கிழமை இடம்பெற்ற கார் முன்பு சைக்கிள் ஒன்றின்மீது மோதி விபத்துக்குள்ளானதில்செட்டிபாளையத்தைச் சேர்ந்த இருசிறுவர்கள்காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவத்தில் 14 வயதான சிறுவர்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

இவ் விபத்துச் சம்வம் பற்றி மேலும் தெரியவருவது -

பலவான் குடி பக்கம் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த கார் ஒன்று செட்டிபாளையம் பிரதான வீதியில் வைத்து சைக்கிளுடன் மோதியுள்ளது. இந்த விபத்தில் சைக்கிளில் பயணித்த 14





வயதானஇருசிறுவர்கள்காயமடைந்ததுடன் செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பின்னர் சிறுவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என வைத்தியசாலி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விபத்தில் காரின் முன் பகுதி சேதமடைந்துள்ளதுடன் சைக்கிளும் பலத்த சேதமடைந்துள்ளது.

இந்த நிலையில் சமபவ இடத்துக்கு விரைந்தகளுவாஞ்சிகுடி பொலிஸார்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மாளிகைக்காடு முஸ்லிம் விவாக பதிவாளராக ரஹபி பிர்தௌஸ்

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழுள்ள மாளிகைக்காடு ஊருக்கான முஸ்லிம் விவாகப் பதிவாளராக முஹம்மட் ரஊஹபி பிர்தௌஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

2025.03 24 ம் திகதி அம்பாறை மாவட்ட செயலகத்தில் வைத்து காணி மற்றும் மாவட்ட பதிவாளர் துமிந்த புஸ்பகுமார அவர்களிடமிருந்து கிடைத்த நியமனத்தை அடுத்து (2025-05-09) அன்று முதல் செயற்படும் வண்ணம் காரைதீவு பிரதேச செயலகத்தில் வைத்து தனது நியமனத்தை அவர் உறுதிப்படுத்திக்கொண்டார்.

மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளி வாசல் முன்னாள் செயலாளராகவும்,



ஜனாஸா நலன்புரி அமைப்பின் முன்னாள் செயலாளராகவும் மற்றும் பல பொதுநிறுனங்களிலும் இணைந்து பல்வேறு சமூக சேவைகளை செய்துவரும் இவருக்கு இந்நியமனம் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.






# சூழலியம் என்பது உலகை உய்விக்க வந்த கோட்பாடு

## மாணவர்கள் மத்தியில் பொ. ஐங்கரநேசன் எடுத்துரைப்பு



கம்யூனிசம், சோசலிசம், பெரியாரியம் என்று காலத்துக்குக் காலம் மனுக்குலத்தை வழிநடத்தவெனக் கோட்பாடுகள்உருவாகி வந்துள்ளன. தற்போது மானுடத்தையும் தாண்டி ஒட்டுமொத்த உலகையுமே உய்விக்க வந்த பெருங்கோட்பாடாகச் சூழலியம் உருவெடுத்துள்ளது. மாணவர்கள் சுற்றுச்சூழலை சூழலியற் கல்வியின் ஊடாக மாத்திரம் அணுகாமல் சூழலியம் என்ற சித்தாந்தத்தின் ஊடாகவும் அணுக முன்வரவேண்டும். அதுவே உலகளாவிய ரீதியில் நாம் இன்று எதிர்கொண்டுள்ள பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளைத்

தரும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தரம் 2027 பிரிவு பயிலுகின்ற மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் வளவாளராகக்

கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

சூழலியற் கல்வி சூழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும். சூழல் விழிப்புணர்வு சூழல் பாதுகாப்பில் எங்களைப் பங்குபற்றுநர்களாக்க வைக்கும். ஆனால், எமது கல்வி முறைமை பூமியையோ, சுற்றுச் சூழலையே அதன் முழுப் பரிமாணங்களோடும் புரிந்து கொள்வதற்கான வாய்ப்புகளைத் தரவில்லை.

நாம் பாடங்களைக் கலைப்பிரிவு, வர்த்தகப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு என்றும் புவியியல், உயிரியல், இரசாயனவியல்,பௌதிகவியல் என்றும் வரையறுத்தே கற்கிறோம். இந்தப் பாட எல்லைகளைக்

கடந்து சிந்திக்க இயலாததால் யாவற்றையும் ஒருங்கிணைத்து நோக்கும் பூரண அணுகுமுறை எங்களிடம் இல்லாமற் போய்விட்டது. இதனால், அந்தகர்கள் யானையைப் பார்ப்பது போன்றே, நாம் ஒவ்வொருவரும் நமது துறைசார் கல்வி அறிவின் ஊடாக மட்டுமே பூமியை மதிப்பீடு செய்து வருகிறோம்.

அறிவியல் என்பது மனுக்குலத்தின் மேம்பாட்டுக்கானவற்றைக் கண்டறிவதற்கென உருவான துறை. ஆனால், அதுவே இன்று இயற்கையைப் பணிவிக்க முயலும், சகல வளங்களையும் அடியோடு அனுபவிக்கத் துடிக்கும் சூழல் விரோத சிந்தனைப் போக்காக உருவெடுத்துள்ளது. ஏனைய உயிரினங்களோடு மனிதனும் ஓர் உயிரினம் என்பதை மறுத்த மனிதனே மையம் என்ற சிந்தனையே சூழல் மீதான ஆக்கிரப்புகளாக வெளிப்படுகின்றது.

மனிதனின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகப் பூமியும் அவ்வப்போது தனது எதிர்ப்புகளைக் காட்டி வருகிறது. காலம் தப்பிய அடைமழை, வெள்ளப் பெருக்கு, கடும் வரட்சி,; பெரும் புயல், நிலச்சரிவு போன்ற இயற்கைச் சீற்றங்கள் எல்லாம் மனிதர்களின் அடக்கு முறைகளுக்கு எதிரான பூமியின் எதிர்ப்பு நடவடிக்கைகள்தான்.


சூழலியற் கல்வி சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கான தீர்வைக் கண்டடையப் போதுமானதல்ல என்பதாலேயே பூமியை ஒரு தனித்த பேருயிரியாகக் காணுகின்ற கயா கோட்பாடு, பூமியை எங்கள் ஆக்கிரமிப்புகளில் இருந்து விடுதலை செய்வதன் மூலம் பூமியின் எதிர்த்தாக்குதல்களில் இருந்து எங்களை விடுதலை செய்யும் விடுதலைச் சூழலியல் கோட்பாடு என்பன சமீப காலமாக மேலெழுந்து வருகின்றன.

இக்கோட்பாடுகள் தமிழர்களுக்குப் புதியது அல்ல. பாரதியாரின் காக்கை, குருவி எங்கள் ஜாதி, கடலும் மலையும் எங்கள் கூட்டம் என்ற பாடலில் பிற உயிரினங்களில் மட்டும் அல்லாது கல்லிலும் மண்ணிலும் எங்களைக் காணுகின்ற சூழல்நேயச் சிந்தனை வெளிப்பட்டிருக்கின்றது. இந்தச் சிந்தனை மரபே அனைத்துச் சூழற் பிரச்சினைகளுக்குமான தீர்வாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# அன்னையள் என்றும் அன்பின் உருவாவாள் !



ஐயிரண்டு திங்கள் சுமப்பவள் அன்னை
மெய்வருந்தி எம்மை வளப்பவள் அன்னை
கண்ணிமையா எம்மைக் காப்பவள் அன்னை
கருணையின் வடிவா யானவளும் அன்னை

பொய்மையிலா அன்பை பொழிபவள் அன்னை
வாய்மையினை மனதில் நிறைப்பவள் அன்னை
தாய்மையெனும் பெருமை பெறுபவளும் அன்னை
தரணியிலே தெய்வ வடிவானவளும் அன்னை

கருவுற்றால் மகிழ்வை காட்டுபவள் அன்னை
கருவளர்ந்தால் அதனைக் காப்பவளும் அன்னை
கருகலைந்தால் உள்ளம் கலங்குபவளும் அன்னை
கருவுருவாய் மலர கடவுளையே நினைப்பாள்

உயிர்போகும் துன்பம் அனுபவிப்பாள் அன்னை
உள்ளிருக்கும் கருவை உயிர்ப்புடனே காண
மடிமீது தவழும் மலர்முகத்தைக் கண்டு
வாழ்வளிக்க வந்த வரமெனவே மகிழ்வாழ்

அன்றலர்ந்த மலராய் அழகுமுகம் பார்த்து
அவள்பட்ட துன்பம் அகன்றதென நினைப்பாள்
அவள்வாழ்வில் அமுதம் அமைந்ததென எண்ணி
ஆனந்த சாகரத்தில் அவள்மூழ்கி நிற்பாள்

இவ்வுலகில் சொர்க்கம் இறங்கியதாய் நினைப்பாள்
இன்பமெலாம் பெருகி வந்ததென மகிழ்வாள்
தன்வாழ்வில் வரமே வாய்த்ததென எண்ணி
தன்குழந்தை முகத்தைப் பார்த்தபடி இருப்பாள்

மடியிருக்கும் குழந்தை வளரவெண்ணி நினைப்பாள்
மற்றவர்கள் மதிக்க வரவெண்ணி உழைப்பாள்
கற்றவர்கள் சபையில் காணவெண்ணி நினைப்பாள்
கற்றுயர்ந்து வரவே கருசுமந்தேன் என்பாள்

பெருமையுடன் பிள்ளை வருவதனைக் கண்டு
பெற்றவுடன் பெற்ற மகிழ்வதனை மறப்பாள்
கற்றறிந்து பிள்ளை கையணைக்கும் வேளை
பெற்றதிலும் பெரிதாய் பேரின்பம் அடைவாள்

உதிரத்தைப் பாலாக்கி உவந்தளிப்பாள் அன்னை
உயிர்கொடுத்தும் எமைக்காக்க உவந்திடுவாள் அன்னை
அன்னையள் என்றும் அன்பின் உருவாவாள்
அவள்பாதம் பணிந்து போற்றிடுவோம் வாரீர்



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்- ஆஸ்திரேலியா

# தென் கிழக்குப் பல்கலையில் அசையும் மாதம்

(நூருல் ஹுதா உமர்)

உலக சுகாதார ஸ்தாபனம், ஏப்ரல் மாதத்தினை நகர்வு மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளது. இதனையொட்டி சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவு உடல், உள ஆரோக்கியத்துக்கு உடற்பயிற்சியின் அவசியம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இதனையடுத்து உடற்பயிற்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வுசெயலமர்வொன்று பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. பல்கலைக்கழகத்தின் பணியாளர் மேம்பாட்டுநிலையத்துடன்இணைந்துகல்முனை பிராந்திய தொற்றா நோய் தடுப்புப் பிரிவு குறித்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில்இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின்பதில்உபவேந்தர்கலாநிதியூ.எல்.ஏ.மஜீட், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பணியாளர் மேம்பாட்டு நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி எச்.எம்.நிஜாம், பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்தியஅதிகாரிடாக்டர்எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



இந்த நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி விசேட வைத்திய நிபுணர் சைத்தியர் ஏ.ஏ.எம். புஹைம் வளவாளராகக் கலந்துகொண்டு உடற்பயிற்சியின் முக்கியத்துவம் தொடர்பாக விரிவுரையாற்றியதுடன் உடற்பயிற்சியின் படிமுறைகள் மற்றும் ஒழுங்கின் அடிப்படையில் செயல்முறை பயிற்சிகளையும் வழங்கினார்.

# பிராந்திய வாய் சுகாதார பிரிவின் முதல் காலாண்டு மீளாய்வு கூட்டம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார நிறுவனங்களில் உள்ள வாய் சுகாதார பிரிவால் முன்னெடுக்கப்படும் சேவைகள் தொடர்பில் ஆராயும் பொருட்டு, பிராந்திய வாய் சுகாதார பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் காலாண்டு மீளாய்வுக் கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.





பிராந்திய வாய் சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் யூ. ஹபீப் முஹம்மட்டால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட இக்கூட்டம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் உட்பட சுகாதார வைத்திய அதிகாரிகள், சமூக பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள், பாடசாலை பல் சிகிச்சையாளர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார தாதியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போதுவாய்சுகாதாரபிரிவுகளால் முன்னெடுக்கப்படும் சேவைகள் தொடர்பில்விரிவாகஆராயப்பட்டதுடன், குறித்த சேவைகளை முன்னெடுப்பதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு தீர்வுகளும் பிராந்திய பணிப்பாளரால் வழங்கப்பட்டன.




# உயிரிழந்த மாணவி தொடர்பில் குற்றவாளிகளுக்கு பாரபட்சமற்ற உயர்ந்த தண்டனை வழங்குங்கள்

## அல்– மீஸான் பௌண்டஷன் அரசுக்கு கோரிக்கை

உயிரிழந்த பாடசாலை மாணவி தொடர்பில் முறையான விசாரணை செய்யப்பட்டு விரைவாக அரசாங்கம் குற்றவாளிகளுக்கு உயர்ந்த பட்ச தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என அல்- மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்கா கோரிக்கை விடுத்துள்ளது.

அல்- மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்கா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

குறித்த மாணவி தொடர்பில் அரசாங்கம் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டுமே தவிர இழைக்கப்பட்ட அநீதிக்கு சமூக வலைதளங்களில் தீர்வை தேட தேவயில்லை என பொறுப்பு மிக்கவர்கள் கூறுவது பொருத்தமற்றது.

கடந்த காலங்களில் எதிர்க்கட்சியாக இப்போதைய அரசாங்கம் இருந்த போது அவர்களும் இதனையே செய்தார்கள் என்பதை மறந்து பேசுவது கவலையளிக்கிறது.

கொழும்பில் கடந்த 29 ஆம் திகதி 16 வயதான, பாடசாலை மாணவி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நாட்டு மக்கள் அனைவரையும் மிகவும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது. குறித்த மாணவி ஒரு பிரபல மகளிர் பாடசாலையில் கல்வி கற்றுவந்த நிலையிலேயே ஆசிரியர் ஒருவரால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகினர் எனவும், இந்த சம்பவம் தொடர்பில் குறித்த மாணவி பாடசாலைக்கு அறிவித்தும் கூட இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாமல் குறித்த மாணவி பாடசாலையை விட்டு இடைவிலகினார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொடூர சம்பவம் தொடர்பில் பெற்றோர்களுக்கு நீதி கிடைக்காத ஓர் அவல சூழ்நிலையிலேயே சமூக வலைத்தளங்கள் வாயிலாக இந்த விடயம் அம்பலப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதன் பின்னர் தான் அனைத்து தரப்பினரது கண்களும் திறந்து இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இது தொடர்பில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரின் நாடாளுமன்ற உரையில் சமூகவலைத்தளங்களினால் தீர்வை பெற்றுக்கொள்ள முடியாது என்ற கூற்று எமக்கு வேதனையளிக்கிறது. எதிர்காலத்தில் இவ்வாறான துரதிர்ஷ்ட சம்பவங்கள் நிகழக் கூடாது என்பதற்காக இந்த விவகாரம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு துரித கதியில் நீதி கிடைக்க வேண்டும், குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை வழங்கப்பட வேண்டும் என அரசை வலியுறுத்துகிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

# இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்தார் நாமல் ராஜபக்ச

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான கூட்டாண்மையின் புதுப்பிப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.





# வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஆட்சி மலரவேண்டும்

## ரெலோ உறுதி




வடக்கு, கிழக்கு எங்கும் பரந்துபட்ட அளவில் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஆட்சி மலரவேண்டும் அதில் நாங்கள் உறுதியாக இருப்பதாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி கட்சியின் பங்காளி கட்சிகளில் ஒன்றாகிய தமிழீழ விடுதலை இயக்கத்தின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமை குழு கூட்டம் வவுனியாவில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்....

உள்ளூராட்சிசபைகளைபலப்படுத்துவது தொடர்பாக நாம் கலந்துரையாடியுள்ளோம். அந்தவகையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஊடாக தமிழ்த் தேசிய கட்சிகளோடு இணைந்து சபைகளை பலப்படுத்துவதாக தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு எங்கும் பரந்துபட்ட அளவிலே

தமிழ்த் தேசிய கட்சிகளின் ஆட்சி மலர வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அந்த அடிப்படையில் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களோடு, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர்கள் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பதாக முடிவு எட்டப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியாகவே வவுனியா மாநகரசபை அமைய வேண்டும் என்பதும் எமது விருப்பம். எனவே அதன் அங்கத்துவ கட்சிகளின் பிரதிநிதிகளோடு எமக்கு கிடைத்த விகிதாசார ஆசனங்களை எப்படி பயன்படுத்துவது என்பது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் முடிவை எட்டுவோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக தொடர்ந்து பயணிப்பது தொடர்பான முடிவுகள் எதுவும் இன்று (நேற்று) எடுக்கவில்லை. இனிவரும் காலங்களில் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக எமது தலைமைகுழு கூடி ஆராயவுள்ளது எனத் தெரிவித்தார். 100

# இளம் தலைவர்களைச் சந்திக்கும் இந்தியாவின் இராஜதந்திர முயற்சி

இலங்கையின் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த இளைய தலைவர்கள் குழு மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் இடம்பெற்றுள்ளது. 'இலங்கையின் அடுத்த தலைமுறை' அமைப்பின் ஏற்பாட்டில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சர்வதேச விவகார உப தலைவரான பாரத் அருள்சாமி, சந்திப்பின்போது, இந்தியா - இலங்கை இருநாட்டு உறவுகள், இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் சமீபத்திய வருகை, மற்றும் இருநாடுகளும் கையெழுத்திட்ட முக்கிய ஒப்பந்தங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்த ஒப்பந்தங்கள் எந்தளவுக்கு இருநாட்டு அபிவிருத்திக்கு வழிவகுக்கின்றன, முதலீடுகள், சக்தி, பாதுகாப்பு, சுகாதாரம், உள்கட்டமைப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு ஆகிய துறைகள் தொடர்பான நோக்கங்களை தெளிவாக விளக்கியதாகக் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின் போது, இலங்கை மக்களின் சார்பில், இந்தியாவின் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு உறுதியான ஒற்றுமையை தெரிவித்ததாகவும் இலங்கை, கடந்த காலங்களில் உள்நாட்டு மோதல்கள் மற்றும் அண்மை கால பயங்கரவாத தாக்குதல்களின் பாரிய பாதிப்பை அனுபவித்த நாடாக, எந்தவொரு வடிவத்திலும் பயங்கரவாதத்தை ஏற்க முடியாது என்பதை வலியுறுத்தினோம்.

மேலும், இந்தியா கடந்த காலத்தில் இலங்கை மிகுந்த நெருக்கடியில் இருந்தபோதும் தொடர்ந்த ஆதரவு வழங்கியதையும், உதாரணமாக பொருளாதார வீழ்ச்சி, சுகாதார சவால்கள் மற்றும் மனிதாபிமான உதவிகள் ஆகியவற்றின் போது வழங்கப்பட்ட நிவாரணங்களையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தோம்.

இந்த சந்திப்பின் போது, இளைய தலைமுறை அரசியல்வாதிகள் இந்தியா-இலங்கை உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், பொருளாதார ஒத்துழைப்பு, கலாச்சார பரிமாற்றம் மற்றும் பிராந்திய பாதுகாப்பு ஆகிய துறைகளில் ஏராளமான யோசனைகளை பகிர்ந்தனர்.

இந்த சந்திப்பு வெறும் மரபு ரீதியான பேச்சுவார்த்தை அல்ல. இது புதிய தலைமுறையின் பார்வையில் உருவாகும் பிராந்திய ஒத்துழைப்பு, அமைதி மற்றும் அபிவிருத்திக்கான உரத்த குரலாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.05.2025இல் வெளியிடப்பெற்றது